**செய்தி வெளியீடு எண்: 115** **நாள் : 22.02.2016**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.2.2016 அன்று தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் சேர்மன் திரு. சி. கல்யாண் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 68–வது பிறந்தநாளையொட்டி ஏழை, எளிய மாணவ, மாணவியருக்கு 6,888 சூரிய சக்தியால் இயங்கும் மேஜை விளக்குகள் (Solar Table Lamps) வழங்குவதை துவக்கி வைப்பதன் அடையாளமாக 5 மாணவ, மாணவியருக்கு சூரிய சக்தியால் இயங்கும் மேஜை விளக்குகளை வழங்கினார்கள்.

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை சேர்மன் திரு. சி.கல்யாண் அவர்கள் தனது சொந்த செலவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் 68–வது பிறந்தநாளையொட்டி ஏழை, எளிய மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 6,888 சூரிய சக்தியால் இயங்கும் மேஜை விளக்குகளை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி வேண்டியும், அதனைத் துவக்கி வைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

திரு. சி. கல்யாண் அவர்களின் கோரிக்கையினை கனிவுடன் ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில், ஏழை, எளிய மாணவ, மாணவியருக்கு 6,888 சூரிய சக்தியால் இயங்கும் மேஜை விளக்குகளை வழங்குவதைத் துவக்கி வைப்பதன் அடையாளமாக 5 மாணவ, மாணவியருக்கு சூரிய சக்தியால் இயங்கும் மேஜை விளக்குகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வினை தொடர்ந்து, தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை மூலம் தயாரிக்கப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சாதனைகளை விளக்கும் பாடல்கள் அடங்கிய “அம்மா பாமாலை” குறுந்தகட்டினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் பிரசிடெண்ட் திரு. எச்.டி. கங்காராஜ் மற்றும் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை நிர்வாகிகள் வழங்கினார்கள். அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “My thanks to all of you for the trouble you have taken to prepare this” என்று தெரிவித்தார்கள்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 22.2.2016